08.07.2025 S.C.No.138 of 2017 P.W.53 – Chandrasekaran

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டு தொடர் குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.

(A1, A2, A4 and A5 present. A3 and A6 absent and their absence condoned as u/s. 317 Cr.P.C. petitions filed and allowed.)

குறுக்கு விசாரணை தொடர்ச்சி தொடங்கிய நேரம் மதியம் 02.25 P.M.

**1ம் எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

கே: இறந்துபோன ஷமீல் பாஷா என்பவரின் மரணம் Custodial death ஆ அல்லது தனியாரால் அடித்துக்கொல்லப்பட்ட மரணமா ?

ப: Custodial death தான்.

கே: இறந்துபோன நபர் ஷமீல் பாஷா 16.06.2015 முதல் 19.06.2015 மதியம் 01.00 மணி வரை யாருடைய Custody–ல் இருந்தார் என்றால்?

ப: 1ம் எதிரி மார்டின் பிரேம்ராஜ்–ன் உத்தரவின்படி பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திலும், 1ம் எதிரியின் பள்ளிக்கொண்டா காவலர் குடியிருப்பிலும் Custody ல் இருந்தார்.

கே: 1ம் எதிரி மார்டின் பிரேம்ராஜ் உத்தரவின்படி ஷமீல் பாஷா காவல் நிலையத்திலும், குடியிருப்பிலும் Custody ல் இருந்தார் என்று எந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது அந்த ஆவணத்தை காட்டுங்கள்?

ப: எந்த ஆவணத்திலும் பதிவு இல்லை.

கே: பதிவு செய்யப்படாத ஒரு தகவலை இந்த நீதிமன்றத்தில் உங்கள் பதிலாக கூறியிருக்கிறீர்கள் என்றால்?

ப: சாட்சிகளின் வாக்குமூலங்களின் அடிப்படையில் கூறுகிறேன்.

கே: எந்த சாட்சியின் வாக்குமூலத்தின் அடிப்படையில் இறந்துபோன ஷமீல் பாஷா பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் எவருடைய பொறுப்பில் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது?

ப: சாட்சி சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.ரவியின் கு.வி.மு.ச பிரிவு 161 வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கே: சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.ரவியின் கு.வி.மு.ச பிரிவு 161 வாக்குமூலத்தில் எவருடைய பொறுப்பில் ஷமீல் பாஷா இருந்ததாக கூறியுள்ளார் என்று பார்த்து கூறுங்கள்?

ப: எஸ்எஸ்ஐ ரவியின் கு.வி.மு.ச பிரிவு 161 வாக்குமூலத்தில் பக்கம் 2 ல் "பள்ளிக்கொண்டா ஆய்வாளர் மார்டின் பிரேம்ராஜ் அவர்களிடம் விவரத்தை கூறி அவர் மீது சந்தேகம் இருப்பதாக கூறினேன் ஆய்வாளர் என்னிடம் சரி நான் வந்து விசாரிக்கிறேன் போலீஸ் ஸ்டேசனிலேயே அவரை வைத்திருங்கள் என்று சொல்லிவிட்டார்."

கே: மேற்கண்ட தகவலை எஸ்எஸ்ஐ ரவி எந்த ஆவணத்தில் பதிவு செய்திருக்க வேண்டும் ?

ப: வழக்கமாக பொதுநாட்குறிப்பில் பதிய வேண்டும்.

கே: பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தின் அன்றைய தேதிய பொதுநாட்குறிப்பேட்டை பார்த்து அவ்வாறு பதிந்துள்ளாரா என்று பார்த்து சொல்லுங்கள்?

ப: பதிவு செய்யவில்லை. ஆனால் அவரின் உயர் அதிகாரியாகிய காவல் ஆய்வாளர் சொன்னதினால் அவர் பதிவிடவில்லை.

கே: 16.06.2015 முதல் 19.06.2015 வரை பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பு அதிகாரி (SHO) யார் என்றால்?

ப: காவல் உதவி ஆய்வாளர்தான் SHO ஆவார்.

கே: அந்த SHO அதிகாரியின் பெயர் என்ன?

ப: அந்த காலக்கட்டத்தில் அந்த காவல் நிலையத்திற்கு காவல் உதவி ஆய்வாளர் பணி நிரப்பாமல் காலியாக இருந்தது. ஆனால் வட்டக்காவல் ஆய்வாளர் என்ற முறையில் காலியாக உள்ள காவல் உதவி ஆய்வாளர் பணியிடத்திற்கு வட்டக்காவல் ஆய்வாளர் அதிகாரத்தின் கீழ் வருகின்ற வேறு ஒரு காவல் நிலையத்தில் உள்ள காவல் உதவி ஆய்வாளரை மேற்படி காலியாக உள்ள காவல் நிலையத்திற்கு நிலைய பொறுப்பு அதிகாரியாக (SHO) எழுத்து மூல செயல்முறையாகவோ அல்லது உத்தரவாகவோ ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். அவ்வாறு ஏற்படுத்தாத நிலையில் அந்த வட்டக்காவல் ஆய்வாளர்தான் காவல் நிலைய பொறுப்பு அதிகாரி பணியை காலியாக உள்ள காவல் நிலையத்திற்கு பார்த்துக்கொள்ள வேண்டும்.

கே: காவல் துறையினுடைய Police Standing Order–ன் படி எந்த பிரிவில் மேற்கண்டவாறு உதவி ஆய்வாளர் பணியிடம் காலியாக இருக்கும்போது அந்த நிலையத்தினுடைய வட்டக்காவல் ஆய்வாளர் அந்த காவல் நிலையத்தின் SHO ஆக பொறுப்பேற்க வேண்டும் என்று உள்ளது?

ப: Police Standing Order–ஐ படித்து பார்த்துதான் இருக்கிறதா என்று சொல்ல முடியும்.

கே: Police Standing Order–ஐ பார்த்து சொல்லுங்கள்?

ப: Police Standing Order 180–ல் (d)–ல் அது தொடர்பான பதிவுகள் உள்ளது.

கே: Police Standing Order 180–ல் (d)–ல் Circle Inspector என்று உள்ளதா என்றால்?

ப: அவ்வாறு இல்லை. ஆனால், Inspector என்று உள்ளது.

கே: Police Standing Order பிரிவு 708–ல் Circle Inspector ஆக பணிபுரியும் மார்டின் பிரேம்ராஜ் காவல் உதவி ஆய்வாளர் பணியிடத்திற்கு வேறு ஒரு நபரை நியமிக்க வேண்டும் என்று எந்த சட்டமும் இல்லை என்றால்?

ப: சரிதான். ஆனால் நடைமுறையில் தனக்குக் கீழ் உள்ள அதிகாரிகளுக்கு உத்தரவிட முடியும்.

கே: நடைமுறையில் தனக்குக் கீழ் உள்ள அதிகாரிகளுக்கு உத்தரவிட முடியும் என்றால் யாரால் உத்தரவிட முடியும்?

ப: மேல் நிலை அதிகாரி.

கே: குறிப்பிட்டு பதவியை சொல்லுங்கள்?

ப: காவல் ஆய்வாளர் அவருக்குக் கீழ் உள்ள கீழ் நிலை உதவி ஆய்வாளர், துணைக்காவல் கண்காணிப்பாளர் அதற்குக் கீழ் உள்ள அதிகாரிகளுக்கு உத்தரவிட முடியும்.

கே: எந்த Police Standing Order–ல் அவ்வாறு உள்ளது?

ப: அவ்வாறு எதுவும் இல்லை. நிர்வாக வசதிக்காக அவ்வாறு உத்தரவிடப்படும்.

கே: உத்தரவு வாய்மொழியாக வழங்கப்படுமா அல்லது எழுத்து மூலமாகவா?

ப: எழுத்து மூலமாகவோ அல்லது வாய்மொழியாகவோ வழங்கப்படும்.

கே: எழுத்து மூலமாகவோ அல்லது வாய்மொழியாகவோ வழங்கப்படும் என்பது எந்த Police Standing Order–ல் உள்ளது?

ப: Police Standing Order–ல் அவ்வாறு இல்லை.

கே: Police Standing Order–ஐ மீறி எந்த காவல் அதிகாரியாவது எழுத்து மூலமாகவோ அல்லது வாய்மொழியின் மூலமாகவோ உத்தரவிட முடியுமா?

ப: முடியாது.

கே: Police Standing Order 204–ல் "In the absence of the Station House Officer the senior officer present shall assume the charge of the Station House Officer" என்று உள்ளது என்றால்?

ப: சரிதான்.

கே: 16.06.2015 முதல் 19.06.2015 வரை பள்ளிக்கொண்டா காவல் நிலைய Station House Officer பதவி காவல் உதவி ஆய்வாளர்தான் என்றால்?

ப: சரிதான்.

கே: மேற்படி காலக்கட்டத்தில் SI of Police என்ற பதவி பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் காலியிடமாக இருந்ததா அல்லது நிரப்பப்பட்டிருந்ததா?

ப: காலியாக இருந்தது.

கே: மேற்கண்ட காலக்கட்டத்தில் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளர் பதவி காலியாக இருந்தது என்றால்?

ப: சரிதான்.

கே: அப்படியானால் 16.06.2015 முதல் 19.06.2015 வரை

பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தினுடைய காவல் நிலைய பொறுப்பு அதிகாரியாக பணியாற்றியவர் யார் என்றால்?

ப: மார்டின் பிரேம்ராஜ், பொதுநாட்குறிப்பேட்டின்படி.

கே: When Martin Premraj was absent due to other duty, who is the next senior officer of the Pallikonda Police Station according to your investigation?

ப: பொதுநாட்குறிப்பேட்டின் படி 16.06.2015 அன்று எஸ்எஸ்ஐ கலைச்செல்வன், எஸ்எஸ்ஐ ரவி அவர்களும், HC 2394 அவர்களும், 17.06.2015 அன்று எஸ்எஸ்ஐ ரவி அவர்களும், HC 2394 அவர்களும், 18.06.2015 அன்று எஸ்எஸ்ஐ ரவி அவர்களும், HC 2394 அவர்களும், 19.06.2015 அன்று எஸ்எஸ்ஐ ரவி அவர்களும், எஸ்எஸ்ஐ சிங்காரம் அவர்களும் நிலைய பொறுப்பு அதிகாரிகளாக செயல்பட்டிருக்கிறார்கள்.

கே: Among the above Police officials who is senior officer according to your investigation?

ப: அது பற்றி எனக்கு தெரியாது.

கே: மேற்சொல்லப்பட்ட காவல் அதிகாரிகளில் எஸ்எஸ்ஐ ரவிதான் Senior என தெரிந்திருந்தும் தாங்கள் விசாரிக்காமல் குத்துமதிப்பாக GD எழுதுகிறவர்கள் எல்லாம் நிலைய பொறுப்பு என்று சொல்வதற்கு ஏதேனும் ஒரு சட்ட பிரிவினை காட்டவும்?

ப: சட்டப்பிரிவில் அவ்வாறு எதுவும் குறிப்பிடப்படவில்லை.

கே: அப்படியானால் 204 of PSO கூறியிருப்பதை ஏற்றுக்கொண்டு அதனை ஆராய்ந்து இந்த நீதிமன்றத்தில் ஆவணங்கள் சமர்ப்பித்துள்ளீர்களா?

ப: சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கே: எந்த ஆவணத்தை சமர்ப்பித்துள்ளீர்கள் அந்த ஆவணத்தை காட்டுங்கள்?

ப: பொதுநாட்குறிப்பேட்டில் உள்ளது.

கே: பொதுநாட்குறிப்பை எழுதுகிறவர்தான் காவல் நிலைய பொறுப்பு அதிகாரி (SHO) என்று கூறுவதற்கு ஏதேனும் காவல் துறை சாரந்த சுற்று அறிக்கையோ, செயல்முறை ஆணையோ, குறிப்பாணையோ உள்ளதா?

ப: தெரியாது.

கே: மேற்படி சங்கதிகள் தங்களுக்கு தெரியாத நிலையில் எதன் அடிப்படையில் பொதுநாட்குறிப்பு எழுதுபவர்கள்தான் நிலைய பொறுப்பு அதிகாரி என்று கூறினீர்?

ப: நடைமுறையின் அடிப்படையில் கூறினேன்.

கே: நடைமுறையின் அடிப்படையில் காவல் நிலையம் செயல்படுவதாக கூறியதால் காவல் நிலையங்கள் PSO–ன் படி நடக்க வேண்டுமா அல்லது அவரவர் நடைமுறையின்படி நடந்துக்கொள்ள வேண்டுமா?

ப: PSO–ஐ பின்பற்ற வேண்டும்.

கே: உங்களின் புலன் விசாரணையில் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கு மார்டின் பிரேம்ராஜ் Special duty ஆக வெளியில் பணியாற்றிக்கொண்டிருக்கும்போது அந்த நிலையத்தில் பணியாற்றிய எஸ்எஸ்ஜகளில் யார் Senior?

ப: பள்ளிக்கொண்டா காவல் நிலைய பணிப்பதிவேட்டின் பெயர்பட்டியலில் வரிசைப்படியாக எஸ்எஸ்ஜ ரவியின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

கே: அப்படியானால் எஸ்எஸ்ஐ ரவிதான் Senior என்பதை ஒப்புக்கொள்கிறீர்களா?

ப: ஆம்.

கே: PSO பிரகாரம்தான் பள்ளிக்கொண்டா காவல் நிலையம் சம்பவ காலத்தில் செயல்பட்டதா அல்லது மீறி செயல்பட்டதா?

ப: PSO –ஐ மீறி செயல்பட்டது.

கே: அதற்கு யாரெல்லாம் பொறுப்பாவார்கள்?

ப: எதிரிகள் பொறுப்பாவார்கள்.

கே: எதிரிகள் PSO–ஐ மீறி செயல்பட்டார்கள் என்பதற்கான ஆவணத்தைக் காட்டுங்கள்?

ப: குறிப்பிட்டுச் சொல்ல இயலவில்லை.

கே: எந்தெந்த PSO–ன்படி எந்தெந்த எதிரிகள் செயல்படவில்லை என்பதை குறிப்பிட்டுச் சொல்லுங்கள்?

ப: PSO –ஐ படித்துப்பார்த்து சொல்ல இயலும்.

கே: PSO–ஐ படிக்காமல் எதன் அடிப்படையில் PSO–ஐ மீறி நடந்தார்கள் என்று சொன்னீர்கள்?

ப: தற்போது ஞாபகமில்லை.

1ம் எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

**விசாரணை முடிவுற்ற நேரம் மாலை 06.07 மணி**

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.07.08 18:13:33 +0530